www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

வகுப்பு : 10

தேர்வு எண்

# மூன்றாம் திருப்புதல் தேர்வு, மார்ச் - 2023

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 15X1=15

1. "இங்கு மாநகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்பது ----- வினா. "அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறுவது ----- விடை.
அ) ஐயவினா, வினாஎதிர் வினாதல் விடை ஆ) அறியா வினா, சுட்டு விடை
இ) அறிவினா, மறைவிடை ஈ) கொளல்வினா, இனமொழிவிடை
2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ------
அ) குலைவகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
3. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய அளபெடுப்பது -------
அ) ஒற்றளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் -----
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
5. எங்கள் வீட்டுப் பூனையார் பால்சோற்றைக் கண்டதும் விரைந்து வருகிறார். இத்தொடரில் இடம்பெற்றுள்ள வழுவமைதி -------
அ) மரபு வழுவமைதி ஆ) இட வழுவமைதி இ) பால் வழுவமைதி ஈ) திணை வழுவமைதி
6. **"மெத்த வணிகலன்"** என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ------
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
7. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்தி, சரியான விடையைத் தேர்க.
   1. உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு – அ) ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை 4
   2. உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் – ஆ) நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று 3
   3. ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது – இ) உயிரினும் ஓம்பப்படும் 2
   4. ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் – ஈ) மெய்ப்பொருள் காண்ப தறிவு 1

   அ) 1–அ, 2–இ, 3–ஆ, 4–ஈ ஆ) 1–ஈ, 2–இ, 3–ஆ, 4–அ
   இ) 1–இ, 2–அ, 3–ஆ, 4–ஈ ஈ) 1–ஈ, 2–இ, 3–அ, 4–ஆ
8. **"பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க"** என்று -----, ----- வேண்டினார்.
அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக
9. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -----
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்
10. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக **ம.பொ.சி** கருதியது ------
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
11. பெயரெச்சத் தொடரைத் தேர்க.
அ) இனியன் கவிஞர் ஆ) குயில் கூவியது இ) அன்பால் கட்டினார் ஈ) கேட்ட பாடல்

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க.

**"வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**பகர்வனர் திரிதரு நகர வீதியும்;**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

12. மேலுள்ள பாடலடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) நற்றிணை ஆ) சிலப்பதிகாரம் இ) புறநானூறு ஈ) குறுந்தொகை
13. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் -----
அ) துகிர், தூசு ஆ) ஆரம், பட்டு இ) சுண்ணம், அகில் ஈ) பட்டு, பருத்தி
14. வண்ணமும் சுண்ணமும் - இலக்கணக் குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) அடுக்குத்தொடர் ஈ) எண்ணும்மை
15. பாடலில் இடம்பெற்றுள்ள சீர்எதுகை, அடிஎதுகைச் சொற்கள் -------
அ) வண்ணமும் - சுண்ணமும், பட்டினும், - கட்டு ஆ) வண்ணமும் - சாந்தமும், பகர்வனர் - பட்டினும்
இ) தூசும் - துகிரும், ஆரமும் - அகிலும் ஈ) வண்ணமும் - அகிலும், கட்டு - காருகர்

## பகுதி - II (மதிப்பெண்கள்:18) பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?
17. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த திணையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
18. பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் மரபினர் யார் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
19. வசன கவிதை - குறிப்பு வரைக.
20. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
ஆ) ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
21. எப்பொருள் எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5X2=10

22. கலைச்சொல் தருக.
1. Homograph 2. Vowel

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
சொற்களை இணைத்து இரு புதிய சொற்களை உருவாக்குக. (தேன், மணி, மழை, மேகலை)
23. பொறித்த - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
24. உவமைகளைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் உருவாக்குக.
அ) கண்ணினைக் காக்கும் இமை போல ஆ) சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல
25. 'ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு' - பாடலில் அமைந்துள்ள பொருள்கோளைக் குறிப்பிடுக.
26. இனிய நிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றாள்; வெற்றி பெற்றாள்; பரிசைத் தட்டிச் சென்றாள். - இத்தொடர்களைக் கலவைத் தொடராக மாற்றுக.
27. பத்தியிலுள்ள பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.
உங்களிடம் செவன் கோல்டு பிஸ்கட் உள்ளது. தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டை வைத்தால் தராசு ஈக்வலாக இருக்கும். பேலன்ஸாக ஒரு கோல்ட் பிஸ்கட் உங்கள் கையில் இருக்கும்.
28. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்:18) பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் முதலில் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. காலமாற்றத்தால்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**வினாக்கள்:**

அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

ஆ) பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

இ) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

30. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துக்கலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.





31. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2X3=6

32. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

33. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) அருளைப் பெருக்கி எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல். (அல்லது)

ஆ) மாற்றம் எனது மானிடத் தத்துவம் எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடல்.

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

35. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து – குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு எழுதுக.

36. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

37. தீவக அணியை விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25


38. அ) முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை எழுதி, அவை இன்றைய வாழ்க்கைச் சூழலோடு பொருந்துவதைக் குறித்த உங்கள் கருத்துகளை எழுதுக. (அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு, நிகழ்கலை வல்லுநர் ஒருவரை சிறப்பு விருந்தினராக அழைத்து அவருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

41. விழுப்புரம் மாவட்டம், பெரியார் நகர், கபிலன் தெரு, 32 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் வளவனின் மகன் அமுதன் மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர், தன்னை அமுதனாக எண்ணி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள், கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படுகின்றன. அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) தமிழில் மொழிபெயர்க்க.

i) Tomorrow is often the busiest day of the week? - **Spanish Proverb**
ii) Education is what remains after one has forgotten what one has learned in school - **Albert Einstein.**
iii) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - **Rita mae Brown.**
iv) It is during our darkest moments that we must focus to see the light - **Aristotle**
v) Success is not final. Failure is not fatal. It is the courage to continue that counts. - **Winston Churchill.**

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.

முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் எனப் பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வீட்டிற்கு வந்தவருக்கு, வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை. விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்துவந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

**வினாக்கள்:**

i) விருந்து குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?
ii) விருந்தோம்பல் குறித்து சிறுபாணாற்றுப்படை கூறுவது யாது?
iii) நம்முன்னோர்களின் மகிழ்ச்சி எதில் இருக்கிறது?
iv) பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் விருந்தோம்பல் குறித்த செய்தியை எழுதுக.
v) பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்று எது?

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3X8=24**

43. அ) குறிப்புகள்: நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – ம.பொ.சி அவர்களின் நாட்டுப்பற்று – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் "மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக. (அல்லது)

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' குறித்து விவரித்து எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன என்பதைக் கதைவழி சுவைபட விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'பாய்ச்சல்' சிறுகதையில் அழகுவின் கதாப்பாத்திரம் போல், நீங்கள் கண்ட பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்தும் விரிவாக எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு <u>சாலைப் பாதுகாப்பு</u> என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

<u>குறிப்புகள்:</u> முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்ட கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

குறிப்புகள் : முன்னுரை – தமிழரின் உணவுமுறைகள் – உணவே மருந்து – தமிழரின் பண்பாட்டு மகுடம் விருந்தோம்பல் – பகிர்ந்துண்ணலே தமிழர் வாழ்வின் அறம் – முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com